**தலைப்பு 224 - இலங்கை விமானப்படை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 224 - இலங்கை விமானப்படையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் ஆகியவற்றினை உள்ளடங்குகின்ற 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படை தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இலங்கை விமானப்படையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி இலங்கை விமான கடற்படையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் சீராக உள்ளது,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் மீது கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீண்டெழும் செலவு

மீண்டெழும் செலவுகளிற்கான கணக்கீட்டில் பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது இலங்கை விமானப்படைக்கு வழங்கப்பட்ட 202,000 லீட்டர் ஜெட் எரிபொருளிலில், 2022 ஆம் ஆண்டில் 28,727,120 பெறுமதியான 77,000 லீட்டர் ஜெட் எரிபொருள் கிடைக்கப்பெற்றது. இருந்தபோதிலும், மீளாய்வாண்டின் போது 224-1-1-1202-3 ஆம் செலவு விடயத்தின் கீழ் 202,000 லீட்டர் எரிபொருளின் பெறுமதியாக மொத்தம் ரூபா 67,320,620 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டது. அதன்படி, நடைமுறை ஆண்டிற்கான எரிபொருள் செலவு தொடர்பாக ரூபா 28,727,120 தொகையினால் உயர்த்திக்காட்டப்பட்டுள்ளது. | இலங்கை விமானப்படையின் பீ-200 என்ற விமானத்திற்காக 2022-2023 இன் போது அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வெளிநாட்டு நன்கொடையாக வழங்கப்பட்ட 202,000 லீட்டர் ஜெட் எரிபொருள் கிடைக்கப்பெற்றது. கிடைக்கப்பட்டது தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் மொத்தமாக ரூபா 67,320,620 தொகை கணக்கிற்கு கொண்டு வரப்பட்டது. | முன்னைய ஆண்டில் வெளிநாட்டு மானியமாக கிடைத்த எரிபொருள் இருப்பினை அந்த ஆண்டின் செலவொன்றாக கணக்கிடப்பட வேண்டும். |

(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான கணக்கீட்டில் பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை விமானப்படையின் நடைமுறையல்லாத சொத்துக்களினை கணக்கீடு செய்வதற்கும், பதிவு செய்வதற்கும் முறையானதொரு முறைமை ஏற்படுத்தப்படாமையினால் முன்னைய ஆண்டுகளில் விட்டுவிடப்பட்ட ரூபா 5,806,436,807 பெறுமதியுடைய நடைமுறையல்லாத சொத்துக்களினை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் ஆரம்ப மீதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது. 1985 - 2001 ஆண்டுகளின் போது கணக்குகளுக்கு கொண்டு வரமுடியாமல் போன 08 விமானங்களின் பெறுமதியான ரூபா 1,492,897,135 தொகையினை அந்த மொத்தம் உள்ளடக்கியது. | இலங்கை விமானப்படை அதிகளவான சொத்துக்களினை கொண்டிருப்பதனால் அவை அனைத்தையும் ஒரே நேரத்தில் கணக்கிடுவது கடினமாக உள்ளமை, மற்றும் அவ்வாறு மேற்கொள்வது நேரத்தை எடுக்கும் என்பது போன்ற காரணங்களினால் முன்னைய 03 ஆண்டுகளின் போது கணக்கிடப்படாத நிலையான சொத்துக்கள் இனங்காணப்பட்டு, கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டன. | நிலையான சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ii) | 2023 மே 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 6,904,872,231 கிரயமுடைய இலங்கை விமானப்படையின் புதிய தலைமை அலுவலக கட்டிடம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்படவோ, வெளிப்படுத்தப்படவோ இல்லை. | இலங்கை விமானப்படையின் தலைமை அலுவலக கட்டிடத்தின் நிர்மாணம் 2023 மே 31 உள்ளபடியாக ரூபா 6,904,872,231 என குறிப்பிடப்பட்ட போதிலும் முழுமையான கிரயம் கணிப்பிடப்பட்ட பின்னரே கிரய அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | காணி மற்றும் கட்டிடத்தின் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டிண் இறுதியில் உள்ளபடியான 04 அவசர ஊர்தி, 14 தீயணைப்பு பொறிகள், 03 ரேடார் வாகனங்கள், ஒரு ஜீப், ஒரு ட்ரக், ஒரு ஜீபீயூ வாகனம் என்பவற்றுக்கான கணக்கீடுகள் ஏசீஏ6-நிதியல்லாத சொத்துக்களின் கூற்றில் விட்டுவிடப்பட்டுள்ளது. | அந்த வாகனங்கள் நன்கொடையாக பெறப்பட்டதுடன், அதற்கான மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றது. | ஆண்டின் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியினை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 முதல் மீளாய்வாண்டு வரை இலங்கை விமானப்படையின் வருடாந்த தேறிய வருமானதில் 20-03-02-16 என்ற வருமானத் தலைப்பிற்குரிய விமானங்களின் குத்தகை வாடகை வருமானம் சரிவொன்றினை சுட்டிக்காட்டியது. அந்த சரிவானது 2016 – 2023 இன் போது 24 முதல் 94 சதவீதத்திற்கிடையில் சாதகமற்றதாக காணப்பட்டது. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விமானங்களின் குத்தகை வாடகை வருமானத்தில் ஏற்பட்ட சரிவிற்கான காரணங்களாக வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான விமானங்கள் வர்த்தக விமானங்களாக பயன்படுத்தியமை, சட்ட சிக்கல்கள், கொவிட-19 தீவிரப் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவைகள் உள்ளடங்குகின்றன. | சரியான நேரத்தில் அவ்வகையான வருமானத்தினை அறவிடுவதற்காக வினைத்திறனான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 128 (2) (உ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு நிலுவை வருமானத்தினை அறவிடுதனை துரிதப்படுத்துவதற்காக வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 – 20 வருட காலப்பகுதிக்கும் மேலாக 10 பொது நிறுவனங்கள் மற்றும் 02 தனியார் நிறுவனங்களிடமிருந்து விமான குத்தகை வாடகை மொத்தம் ரூபா 12,674,073 அறவிடவேண்டியதாக இருந்தது. | அந்த நிலுவை வருமானங்களினை பதிவளிப்பு செய்வதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை உடனடியாக அறவீடு செய்வதற்காக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பாரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 128 (2) (ஐ) இன் பிரகாரம் வீதங்கள் மற்றும் விதிப்பனவுகள் அல்லது வரிகள், கட்டணங்கள் போன்றவற்றினை அரசாங்கத்தின் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் மீளாய்வு செய்ய வேண்டும் என்பதோடு பொருளாதாரம் மற்றும் | போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் பயண அமைச்சு அந்த கட்டணங்களினை திருத்துவதற்கான பொறுப்புவாய்ந்ததாகும். கட்டணங்களினை திருத்துவதற்குரிய | நிதி பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் வீதங்கள் மற்றும் விதிப்பனவுகள் அல்லது வரிகள், |

| | | | |
|---|---|---|---|
| | ஏனைய சூழ்நிலைகளின் மாற்றத்திற்கு ஏற்ப தேவையானவிடத்து காலத்துக்கு காலம் இவைகளினை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், 2016 ஆம் ஆண்டிற்கு பின்னர் விமானம் தரையிரங்கும் கட்டணத்தினை திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால், விமானம் தரையிரங்கும் கட்டணங்கள் ரூபா 120.75 என குறைவாக காணப்பட்ட அதே வேளை 2009 உடன் தொடர்புடைய தரையிரங்கும் வருமானம் மொத்தமாக ரூபா 236,221 பெறப்பட்டது. | அங்கீகாரத்திற்காக பாதுகாப்பு அமைச்சு திறைசேரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | கட்டணங்கள் போன்றவற்றை மீளாய்வு செய்ய வேண்டும் என்பதோடு பொருளாதாரம் மற்றும் ஏனைய சூழ்நிலைகளின் மாற்றத்திற்கு ஏற்ப தேவையானவிடத்து காலத்துக்கு காலம் இவைகளினை திருத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் . |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 128 (2) (ஐ) உடன் இணங்கத் தவறியமையினால் ஏகல விமானப்படை முகாமில் உள்ள 05 கட்டிடங்களுடன் தொடர்புடைய பத்து உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அரச வருமானத்திற்கான ஒரு உடன்படிக்கையும் நியதிச்சட்டமல்லாத வருவாயினை செலவு வைப்பதற்காக மற்றைய உடன்படிக்கையுமாகும். அதனால், கட்டிடத்திலிருந்தான குத்தகை வாடகை வருவாய் மொத்தமாக ரூபா 2,037,400 தொகையினை அரசாங்கம் இழந்தது. | அரசாங்கத்தினால் பெறப்பட்ட ஒப்பந்த வாடகையினை அரச கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டுள்ள அதேவேளை சேவை நிறுவனங்கள் நிதியத்தினால் பெறப்பட்ட குத்தகை வருமானத்தினை நலன்புரி மற்றும் கட்டிட பராமரிப்பு மீது செலவளிக்கப்படுகிறது. | அரச கட்டிடங்களின் பயன்பாட்டிலிருந்தான உழைப்புக்களினை அரச வருமான கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கற்கைகள், கலந்துரையாடல்கள், மாநாடுகள் மற்றும் பயிற்சிகள் என்பவற்றுக்காக வெளிநாடு செல்வது தொடர்பாக 2023 மார்ச் 20 ஆம் திகதிய நிதி அமைச்சின் MF/06/23/50/2023 ஆம் இலக்க புதிய சுற்றறிக்கையின் 02 (1) ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நாளைக்கு ஐ.அ.டொ. 40 என்ற அமையக் கொடுப்பனவாக இருந்ததை | 2023 மே 03 இல் புதிய சுற்றறிக்கையினை பாதுகாப்பு அமைச்சினால் முப்படைகளுக்கு மேலனுப்பப்பட்டு, அதன் மூலம் 2023 மார்ச் 20 முதல் அமுலுக்கு வருகின்ற அந்த சுற்றறிக்கையின் திருத்தங்களினை கடைப்பிடிக்குமாறு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகபட்சம் 15 நாட்களுக்கு ஐ.அ.டொ. 25 ஆக குறைக்கப்பட்டது. இருப்பினும் பயிற்சி, கலந்துரையாடல்கள், மாநாடுகள், கற்கைகள் என்பவற்றுக்காக சென்ற 10 உத்தியோகத்தர்களுக்கு 2023 மார்ச் 20 இற்கு பின்னரும் நாளாந்த கொடுப்பனவாக ஐ.அ.டொ. 40 செலுத்தப்பட்டுள்ளது. அதனால், கூறப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக வெளிநாட்டு பிரயாணம் தொடர்பான செலவாக ரூபா 2,006,109 தொகைக்கு சமனான ஐ.அ.டொ. 6045 செலுத்தப்பட்டுள்ளது. | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. அதன்படி, மார்ச் 20 முதல் 2023 மே 03 வரையான காலப்பகுதியின் போது விமானப்படையின் உத்தியோகத்தர்களுக்கு அமையக் கொடுப்பனவு செலுத்தியமை தொடர்பாக 2024 ஏப்ரல் 25 ஆம் திகதிய ශ්‍රීලංගුහ/255/1/ගිණුම් இலக்க கடிதத்தின் ஊடாக பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல்கள் நாடப்பட்டன. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் இலங்கை விமானப்படைக்கான வாகன திருத்தங்கள் மற்றும் சீருடைகள் கொள்வனவு என்பவைகளின் தேவைப்பாடு பலமாக உணரப்பட்ட போதிலும் 2023 நவம்பர் 30 வரையிலும் உரிய வருடாந்த ஏற்பாடு குறைவாக பயன்படுத்தப்பட்டது. எனினும், ரூபா 3,064,000,000 தொகையான மீண்டெழும் ஏற்பாடு மற்றும் ரூபா 5,491,127,000 தொகையான இயந்திரம் மற்றும் இயந்திர நோக்கவிடயத்தின் கீழ் மூலதன ஏற்பாடு என்பன நிறுத்தி வைக்கப்பட்டு இலங்கை இராணுவத்தின் மீண்டெழும் நோக்கவிடயத்திற்காக வழங்கப்பட்டது. | வருடாந்த விலைமனுக்கோரல் காலப்பகுதியினை நீடிப்பதற்கு பரிந்துரைக்காமை, இறக்குமதி கட்டுப்பாடுகள், பண்டங்களின் உயர்ந்த விலைகள், மீண்டெழும் செலவினத்தின் 06 சதவீத நிறுத்திவைப்பு, சேவையில் உள்ள நடைமுறை ஊழியர்களின் எண்ணிக்கை போன்ற விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. எனினும், பல்வேறு காரணங்களினால் சேவைவியிலிந்து ஊழியர்கள் நீக்கப்பட்டமை மற்றும் அவர்களுடைய இளைப்பாறுதல் மற்றும் எம்ஏ-60 சிவில் விமானங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அங்கீகாரத்தின் குறைபாடு போன்ற காரணங்கினால் ஏற்பாட்டினை பயன்படுத்தப்படாமல் இருந்தது. | உயர் வினைத்திறனுடன் வருடாந்த ஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளினை ஏற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94 (1) இன் பிரகாரம் ஏற்படுத்தப்படும் கடப்பாடுகள் மற்றும் செலவுகள் நிதியாண்டிற்கான அத்தகைய ஏற்பாடுகளை விட எந்த நேரத்திலும் விஞ்சப்படக்கூடாது. இருந்தபோதிலும் போக்குவரத்து தொடர்பான செலவினத்தின் 224-1-1-1401 ஆம் இலக்க நோக்க நிகழ்ச்சியின் கீழ் வருடாந்த ஏற்பாட்டினை விஞ்சி ரூபா 1,765,607 தொகையினால் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. | போக்குவரத்துக்கான நோக்க நிகழ்ச்சி செலவினம் - 1401 இன் கீழ் தேறிய ஏற்பாடு ரூபா 570,000,000 தொகையாக இருந்தது. ஏசீஏ-2 (iii) படிவத்தின் மொத்த செலவினமாக ரூபா 557,850,607 தொகையாகும். அதனால், ஏற்பாடுகளினை விஞ்சி எவ்வித பொறுப்புக்களும் ஏற்படுத்தப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நிதி ஆண்டிற்கான ஏற்பாட்டினை வருடாந்தம் ஏற்படுத்தப்படும் மொத்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் விஞ்சக்கூடாது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குள் தீர்க்கப்பட வேண்டிய சகல பொறுப்புக்களும் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் பின்னிணைப்பு – III இல் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். இருந்தபோதிலும், 28 நிகழ்வுகளுடன் தொடர்புடைய ரூபா 20,121,111 பெறுமதியுடைய பொறுப்புக்கள் அதன் மீளாய்வாண்டில் உள்ளடக்கப்படவில்லை. அதற்கு மேலதிகமாக, முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ள பொறுப்புக்கள் கூற்றுக்களில் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக 10 நிகழ்வுகளுடன் தொடர்புடைய ரூபா 12,619,050 பெறுமதியுடைய பொறுப்புக்களினை உள்ளடக்கப்படவில்லை. | நியாயமானதொரு பதில் வழங்கப்படவில்லை. | பொறுப்புக்கள் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு சோதனை பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சம்பவங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பானவை | | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 1 மற்றும் 2 ஆம் பிரிவு | 2,360,680 | அரசாங்கத்திடமிருந்து சம்பளங்களினை பெறுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் வேறு ஒரு பதவிக்கு விடுவிக்கப்படுவர். ஆனால் அவ்வாறான உத்தியோகத்தரினை வெளியக அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிக்கமர்த்தக்கூடாது. இருந்தபோதிலும், இலங்கை விமானப்படையின் 04 விமானப்படையினர் தனியார் நிறுவனமொன்றுக்கு விடுவிக்கப்பட்டு, 2023 மார்ச் 01 முதல் 2023 செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதிக்காக அரசாங்கத்தினால் ரூபா 2,360,680 தொகை சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படைத் தளத்தின் 31 விமானப்படையினர் 01 நாள் முதல் 03 மாதம் வரையான காலப்பகுதிக்காக வெளியக நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். | (அ) 04 விமானப்படையினர் தற்போது விமானப்படையின் தலைமை அலுவலகத்திற்கு திரும்பியுள்ளனர்.<br>(ஆ) விமானப்படை மற்றும் சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்ட விஷேட கடமைகள் தொடர்பாக விமானப்படையினர் பணிக்கமர்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியாக அலுவலர்கள் பணிக்கமர்த்தப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 128 (1) (ஆ) | 15,303,304 | கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவர் நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்கும், அவரது திணைக்களத்தின் பயனுறுதிக்காக அதனை கணக்கு வைத்தலுக்கும், சரியான | நலன்புரி வேலைக்காக இந்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்குரிய அந்த வருமானத்தில் ரூபா 10,313,775.00 தொகையினை வழங்குதல், | அரசாங்கத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களின் பயன்பாட்டில் இருந்தான உழைப்புக்களினை அரச |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உறுதிப்படுத்தலுக்காக போதியளவு வழங்கப்படுவதற்கும், தேவையானவிடத்து அரசாங்க வருமதிகளையும், வருமதிகளினை முறைமையாகவும், முழுமையாகவும், உடனடியாகவும் சேகரித்து, பெறப்பட்ட பணத்தினை கணக்கிற்கு கொண்டு வருதல் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்பாக உள்ளார். இருந்தபோதிலும், கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படையில் மனித மற்றும் பௌதீக சொத்துக்கள் தொடர்பாக 24 வருமான மூலங்களில் இருந்து ஈட்டப்பட்ட ரூபா 15,303,304 தொகையினை அரச கணக்கிற்கு செலவு வைக்கப்படவில்லை. மாறாக, அந்த பணங்களினை சேவை நிறுவன நிதியம் மற்றும் நியதிச்சட்டமற்ற நிதியங்களில் செலவு வைக்கப்பட்டதனால் அந்த வருமானத்தினை அரசாங்கம் இழக்க நேரிட்டது. | தேசிய உற்பத்திகளை அதிகரித்தல், மற்றும் அதனோடு இணைந்த வகையில் பொருத்தமானதொரு பொறிமுறையினை தயாரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 2 (1) (இ) | 1,383,125 | அரசாங்கத்துக்குரிய சகல வருமானங்களும், பெறுவனவுகளும் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் நிகழ்ச்சிகளின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக கதுகுருண்ட விமானப்படை முகாமின் ஓடுபாதையினை வழங்கியதன் மூலம் | சேவை நிறுவனங்கள் நிதியத்தின் ஊடாக இந்த ஓடுபாதை பராமரிக்கப்படுகின்றது. இது தொடர்பாக பொருதத்தமானதொரு பொறிமுறையினை தயாரிப்பதற்கான கலந்துரையாடல் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களின் பயன்பாட்டில் இருந்தான உழைப்புக்களினை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஈட்டப்பட்ட ரூபா 1,383,125 தொகையினை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கவில்லை. மாறாக, நியதிச்சட்ட நிதியமற்ற சேவை நிறுவனங்கள் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | | |
| (iv) | தாபன - விதிக்கோ வையின் XXIV ஆம் அத்தியாய த்தின் 04 ஆம் பிரிவு | உயிரிழந்த, ஓய்வு பெற்ற அல்லது கடன்களினை அறவிடுவதற்கு முன்பாக சேவைகள் முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் இடர் கடன் மீதிகளினை அறவிடமுடியாத சந்தர்ப்பத்தில் அத்தகைய மீதிகளினை உத்தரவாதமளித்தவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். எனினும், அதனை மேற்கொள்ளத் தவறியமையினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் உயிரிழந்த/இடைநிறுத்தப்பட்ட/சேவை வெறிதாக்கட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 10,759,840 ஆக காணப்பட்டதுடன், அதில் 05 வருடங்களுக்கு மேலாக உள்ள ரூபா 7,734,231 கடன் நிலுவையானது தொடர்சியாக கொண்டுசெல்லப்படுகிறது | 2024.04.30 அளவில் ரூபா 160,476.52 தொகையுடைய இளைப்பாறிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடவேண்டிய கடன் கடன் மீதியினை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பதவிகளை வெறிதாக்கிய உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 455,126.69 தொகையினை பதிவளிப்பு செய்வதற்கு பரிந்துரைகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளினை அறவீடு செய்வது தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 வரிப் பொறுப்புக்களுடன் இணங்காமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முற்பண தனிநபர் வருமான | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட SEC/2023/E/01 ஆம் வழிகாட்டியின் 03 ஆம் பந்தியில் 04 ஆம் | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான அதிகாரச்சட்டத்தின் |

| | | |
|---|---|---|
| வரி (ஏபீஜடீ) கணிப்பிடப்பட வேண்டும். எனினும், அவ்வாறு மேற்கொள்ளத் தவறியமையினால் 2023 ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் ஆகிய மூன்று மாதங்களிற்காக 100 உத்தியோகத்தர்களின் மாதிரி எடுத்தலிலிருந்து முற்பண தனிநபர் வருமான வரியாக ரூபா 2,875,270 தொகையினை அறவிடுவதற்கு பதிலாக ரூபா 482,770 தொகை அறவிடப்பட்டுள்ளது. அதனால், உள்நாட்டு வருமான அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களின் வருமானம் சரியாக இனங்காணப்படுதலில் உள்ள தவறினால் முற்பண தனிநபர் வருமான வரியாக ரூபா 2,392,500 தொகையினை அரசாங்கம் இழக்க நேரிட்டது. | இலக்கத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய சகல சேவைகளின் ஊழியர்களுக்கு பொதுவாக வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளை முற்பண தனிநபர் வருமான வரியினை (ஏபீஜடீ) கணிப்பிடுவதில் உள்ள 10 வருமான மூலங்களின் கீழ் கருத்திற்கொள்வதற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | பிரகாரம் முற்பண தனிநபர் வருமான வரி (ஏபீஜடீ) கணிப்பிடப்பட வேண்டும். . |

## 2.6 ஒழுங்கற்ற பரிமாற்றங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விமானச் சிறகத்தலைவர் (Wing Commander) தரங்களில் உள்ள விமானப்படையின் உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணியாளர் வாகனங்களுடன் சேர்த்து அரசாங்க நிறுவனங்களின் ஏனைய பதவிகளுக்காக விடுவிக்கப்பட்டதுடன், 2022 ஜனவரி 01 முதல் 2022 செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதியின் போது அத்தகைய 29 உத்தியோகத்தர்களுக்கு 76,175 லீட்டர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ள அதேவேளை அந்த | பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தொடர்புடைய நிறுவனத்தின் செயற்பாடு வருகிறது. அதனால், பணியாளர் வாகனங்களும் ஏனைய சலுகைகளும் அவர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | தலைப்புடன் தொடர்புடைய செலவினங்கள் சரியாக இனங்காணும் வகையில் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களுக்காக குத்தகை வாடகையாக ரூபா 10,800,000 தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. அதனால், விமானப்படைக்கு வெளியாக ஏனைய நிறுவனங்களில் கடமை புரிந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக விமானப்படை செலவுத்தலைப்பின் கீழ் ரூபா 10,800,000 தெகை செலவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | கைச்சாத்து பத்திரங்களுடன் இணைத்துள்ள பட்டியல்களில் விமானப்படை வாகன இலக்கம் அல்லது சிவில் வாகன இலக்கம் போன்ற அடிப்படை தகவல்கள் குறிப்பிடப்படாமல் 47 வாகனங்களிற்காக ரூபா 50,000 தொகைப் படி மாதாந்த குத்தகை வாடகைக்கு பெறப்பட்ட வாகனங்களிற்கான குத்தகை வாடகைக் கொடுப்பனவாக ரூபா 21,150,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய தகவல்களினை உள்ளடக்கி பட்டியல்களை சமர்பிக்குமாறு விநியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கொடுப்பனவு கைச்சாத்து பத்திரங்களிலும், துணை ஆவணங்களிலும் சரியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 தொடக்கம் 2024 பெப்ரவரி 09 வரையான காலப்பகுதியின் போது உத்தரவாத காலம் அல்லது நியம சான்றிதழ்கள் இன்றி அக்ரோ நிதியத்தின் ஊடாக ரூபா 6,915,000 தொகையில் இலங்கை விமானப்படையினுடைய கட்டுநாயக்க தள முகாமின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மெத்தைகள் செயற்திட்டத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட 1380 மெத்தைகளினை இலங்கை விமானப்படை கொள்வனவு | தரத்தினை சோதனை செய்வதற்காக தனியானதொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினால் தரம் பரிசோதிக்கப்பட்டவுடன் பண்டங்களினை இருப்புக்குள் எடுக்கப்படும். | முறையானதொரு தர சான்றிதழ்கள் மற்றும் உத்தரவாத காலப்பகுதியுடன் கொள்வனவுகளினை மேற்கொள்வதற்கு பெறுகை நடைமுறை செயற்பாடு பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தது. பெறுகை நடைமுறை வழிகாட்டிகளின் 1.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் தரம் மற்றும் தேவைப்பாடு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே கொள்வனவு செய்யப்பட வேண்டும் - பெறுகையொன்றின் பிரதான குறிக்கோள். எனினும் இந்த தேவைப்பாடு விலகலடைந்துள்ளது. | | |
| (ஆ) | முறையாக தரத்தினை பரிசோதிக்காமலும், பதிவேடுகளில் உள்ளடக்காமலும் 2024 ஜனவரி 01 இல் அகுரகொடவில் உள்ள விமானப்படை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சித் திட்டமொன்றுக்காக ரூபா 1,785,000 மதிக்கத்தக்க 300 மெத்தைகளினை இலங்கை விமானப்படை பயன்படுத்தியது. பிந்திய திகதியிலேயே அந்த மெத்தைகளின் கொள்வனவு தொடர்பான கட்டளை வழங்கப்பட்டது. ( 2024 ஜனவரி 20 ஆம் திகதிய PD/L/BRK/23/10266 ஆம் இலக்க கட்டளை ஊடாக) | அவசரத் தேவைப்பாடு காரணமாக 2023 திசெம்பர் 28 இல் இயக்குனரின் (வழங்கல்) அங்கீகாரத்தினை தொடர்ந்து வழங்கலினை பெறும் மற்றும் விநியோகிக்கும் அலகு, மற்றும் பராமரிப்பு பண்டகசாலை மூலம் தரப் பரிசோதனையின்றி 300 மெத்தைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 2024 ஜனவரி 01 இல் அகுரகொடவில் உள்ள விமானப்படை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற *பிரித்* ஓதுதல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அந்த மெத்தைகள் பயன்படுத்தப்பட்ட போதிலும், அந்த மெத்தைகள் 2024 பெப்ரவரி 13 இல் தர உறுதிப்பாடு நிறைவேற்றப்பட்டு 2024 பெப்ரவரி 15 இல் இருப்பு களஞ்சியசாலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. | இருப்புக் கட்டுப்பாடு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை விமானப்படையானது ரூபா 9,675,75 (பெ.சே.வ நீங்கலாக) தொகையில் 03 பாதுகாப்பாளர் வாகனங்களினை திருத்துவதற்காக 2021 பெப்ரவரி 06 இல் தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டது. இருந்தபோதிலும், 673 நாட்கள் தாமதித்த பிற்பாடும் திருத்தம் மேற்கொள்ளப்படாமல், வாகனங்கள் திருப்பி | கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படி வாகனங்கிளை திருத்தும் போது வெளியக நிறுவனங்களின் மீது வசதிக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றன. தர உறுதிப்பாட்டு சோதனையைத் தொடர்ந்து “டெக் நெட் ஓடோ வேர்ல்ட் (பிறைவேட்) லிமிட்டட்” என்றழைக்கப்படும் நிறுவனமும் தெரிவு | தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவானது ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை வழிகாட்டிகள் மற்றும் பெறுகை கோட்பாடுகளுக்கு இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அனுப்பப்பட்டன. பெறுகையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டினை பரிசோதனை செய்யும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிகளின் 2.6.1 (அ) IV ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை வழிகாட்டிகள் மற்றும் பெறுகை கோட்பாடுகள் பின்பற்றப்படும் என்பதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு தனிப்பட்ட முறையில் பொறுப்பாக இருக்க வேண்டும். இருந்த போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து மாறுபட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பெறுகை வழங்கப்பட்டுள்ளது. அதனால், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அவர்களுடைய பொறுப்பிலிருந்து விலகலடைந்ததன் காரணமாக தொடர்புடைய பெறுகை வெற்றியளிக்காமல் போனது. | செய்யப்பட்டது. | |

## 3.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படை தளத்தின் இயந்திரவியல் போக்குவரத்து மற்றும் மாற்றியமைத்தல் பிரிவினால் 2021 யூன் 23 இல் இருந்து பெறப்பட்ட 105 வாகனங்களினை முறையாக திருத்தம் செய்ய தவறியமையினால் 01-12 வருட காலத்திற்கு மேலாக அந்த வாகனங்கள் குறை பயன்பாடுடையதாகியன. | அதிக கிரயங்கள் காரணமாக 105 வாகனங்களில் 31 வாகனங்களினை அகற்றுவதற்கு கணக்கெடுப்பு குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. மீட்புத் திட்டத்தின் கீழ் ஏனைய 74 வாகனங்கள் தொடர்பாக பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படும்.. | தாமதிக்காமல் பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதோடு வாகனங்களினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படை முகாமின் வழங்கல் மற்றும் பராமரிப்பு பிரிவினுடைய களஞ்சியசியத்தில் தீயணைப்பு முறைமையொன்றினை நிறுவுவதற்காக 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முறையே ரூபா 1,346,000 மற்றும் 3,841,860 தெகைகளை | அது தொடர்பாக பல கட்டங்களின் கீழ் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டதனால், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட உருப்படிகளினை பயன்படுத்தி | உருப்படிகளினை பயன்படுத்தாமல் வைத்திருக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கி ரூபா 5,187,860 தொகையினை செலவுசெய்து உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. எனினும், 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி வரையாவது தீயணைப்பு முறைமை நிறுவப்படவில்லை. அதனால், அங்கே இடர் காணப்படுவதுடன் களஞ்சியத்தில் அந்த உருப்படிகள் பயனற்றதாகவும் உள்ளன. | செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு மிகுதி ஏற்பாடு பெறப்பட வேண்டும். 2024 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (இ) | 2024 பெப்ரவரி 09 இல் உள்ளபடியாக கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படையினுடைய பிரதான முகாமின் 06 களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 5,574,656 மதிக்கத்தக்க மெல்ல நகரும் உருப்படிகளின் 22,061 உருப்படிகளும், ரூபா 2,763,655 மதிக்கத்தக்க 12,946 எண்ணிக்கையிலான வழங்கப்படாத உருப்படிகளும், ரூபா 840,570 மதிக்கத்தக்க 633 உருப்படிகளும் அகற்றல் சபைக்கு அனுப்பப்பட்டது. | விமானப்படையின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் அங்கீகாரத்தினை தொடர்ந்து களஞ்சியத்திலிருந்து மெல்ல நகரும் உருப்படிகள் வழங்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டிற்கான இருப்பு உறுதிப்படுத்தல் சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக வழங்கப்படாத உருப்படிகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். அகற்றல் சபைக்கு குறிப்பிடப்படும் உருப்படிகளின் படி சபையின் பரிந்துரையின் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். | குறைவான பயன்பாடுகளின்றி உருப்படிகள் பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஐ.அ.டொ. 191,289.22 மதிக்கத்தக்க விமானங்களின் 27 உதிரிபாகங்களினை திருத்துவதற்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டு 09-19 ஆண்டு காலப்பகுதியை கடந்துள்ளதுடன், மற்றும் 2004 – 2014 ஆண்டுகளுக்கிடையில் பெறுமதி அறியப்படாத கழிவுப் பெறுமானமான ஐ.அ.டொ. 63,000 தொகையுடைய 32 உதிரிப்பாகங்கள் திருத்துவதற்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டது. இருந்தபோதிலும், 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி வரையிலும் அந்த உருப்படிகள் பெறப்படவில்லை. | 2004-2014 இன் போது பெறப்பட்ட ஆகாய விமான உதிரிப்பாகங்களின் உருப்படிகளின் எண்ணிக்கை ஒன்றாக இருந்தது. மேலும் பெறவேண்டிய மிகுதி 33 உருப்படிகளினை அகற்றல் சபைக்கு குறிப்பிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள அதேவேளை ஒரு உருப்படியினை நீதிமன்ற விசாரணைக்காக அனுப்பப்படும். ஏனைய 14 உருப்படிகளினை பழைய நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகள் மற்றும் பழைய நிலைக்கு கொண்டு வரும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படை தள முகாமினுடைய விமான பிரிவின் உதிரிப்பாகங்கள் தொடர்பான அறுபத்தி மூன்று உதிரிப்பாக உருப்படிகள் புதிய கொள்வனவாகவும், திருத்தப்பட்ட உருப்படிகளாகவும் கொண்டுவரப்பட்டன. அவைகள் பல்வேறு காரணங்களினால் பொருத்தமான பிரிவுக்கு வழங்கப்படாமல் 01 – 04 ஆண்டு காலப்பகுதியாக தனிமைப்படுத்தப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அதன்படி, பெறுமதி விஷேடமாக குறிப்பிட்டுள்ள 09 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட யூரோ 21,218.86 மற்றும் ஐ.அ.டொ 50,141 மதிக்கத்தக்க உதிரிப்பாகங்களுடன் சேர்த்து, 2020 – 2023 இன் போது 16 சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய ஐ.அ.டொ 527,550 உயர் மதிப்பில் பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்ட உதிரிப்பாகங்கள் என்பன களஞ்சியத்தில் பயனற்றதாக இருந்தன. | 2020-2024 இன் போது புதிய கொள்வனவாகவோ அல்லது திருத்தப்பட்ட உருப்படிகளாகவோ வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட விமான உதிரிப்பாகங்கள் பல்வேறு காரணங்களினால் பிரிவுக்கு வழங்கப்படாமல் தனிமைப்படுத்தல் களஞ்சியத்தில் உள்ளன. | விமான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டவுடன் களஞ்சியத்தில் பயனற்றதாக வைத்திருப்பதற்கு பதிலாக அவ்வகையான உருப்படிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | விமானங்களிற்கான உதிரிப்பாகங்களினை கொள்வனவு செய்வது தொடர்பாக 09 சந்தர்ப்பங்களில் சுங்க கட்டணங்களாக ரூபா 65,752,943 தொகை இலங்கை விமானப்படைக்கு ஏற்பட்டுள்ளது. எனினும், கட்டளையின் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தனிமைப்படுத்தலின் கீழ் வைத்திருக்கப்பட்டன. எனவே, 01-04 வருடங்களாக அதன்மீது ஏற்பட்ட கூறப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது. | எவ்வித பதிலளிப்புக்களும் வழங்கப்படவில்லை. | விமான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டவுடன் களஞ்சியத்தில் பயனற்றதாக வைத்திருப்பதற்கு பதிலாக அவ்வகையான உருப்படிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த வருமானக் கூற்றுக்களுடன் வழங்கப்பட்டுள்ள புத்தகங்களில் இருந்து பதிவளிப்பு | பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் விமானப்படையின் | அங்கீகரக்கப்பட்ட நட்டங்களின் பதிவளிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | கூற்று – பின்னிணைப்பு (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள 10 நிகழ்வுகளுடன் தொடர்புடைய ரூபா 9,740,136 பெறுமதியிடப்பட்ட நட்டங்கள் மற்றும் விடுபாடுகளுடன் தொடர்புடைய நட்டங்களினை பதிவளிப்பு செய்வதற்காக நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், அங்கீகாரம் பெறப்பட்டதில் இருந்து 1-13 மாதங்கள் கடந்த பின்னரும் புத்தகங்களிலில் இருந்து நீக்குவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | தளபதியிடமிருந்து நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நட்டங்களினை பதிவளிப்பு செய்வதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றவுடன் பொருத்தமான பிரிவுகளினை அவ்வாறு செய்வதற்கு குறிப்பிடப்படும். | புத்தகங்களில் இருந்து தவிர்த்துவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியாக பதிவளிப்பு செய்யப்படாத நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்களின் பெறுமதி ரூபா 577,625,996 தொகை கொண்டு வரப்பட்டன. இருந்த போதிலும், 2023 ஜனவரி 01 இல் உள்ளபடியான பதிவளிப்பு செய்யப்படாத ஆரம்ப மீதி ரூபா 595,362,729 பெறுமதியான தொகை காணப்பட்டதன் படி ஆரம்ப மீதியில் வேறுபாடு ரூபா 17,736,733 இருந்தது. | ஆரம்ப மதிப்பீடு மீளமைக்கப்பட்டது. 08 சம்பவங்களுடன் தொடர்புடைய சேதங்கள் உள்ளடக்கப்படவில்லை. | ஆரம்ப மீதியில் உள்ள வேறுபாடுகளுக்கான காரணங்கள் கொடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாகன இல. ගුවන් 3878 உடன் சம்பந்தப்பட்ட விபத்து தொடர்பாக மீளாய்வாண்டின் போது இருந்த ரூபா 1,508,440 மீதியினை நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் பின்னிணைப்பு (ii) இல் வழங்கப்பட்டுள்ள அறவிடுதல் மற்றும் பதிவளிப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியதிலிருந்து முழுமையான விட்டுவிடப்பட்டுள்ளது. மேலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் சம்பளங்களில் இருந்து அறவிடப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்களின் 19 நிகழ்வுகள் தொடர்பாக மொத்தம் ரூபா 3,014,342 தொகையினை | பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடம் இருந்து அறவிடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துகொண்டிருந்தமையினால் தவறு காரணமாக அந்த தொகையினை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட முடியவில்லை. | நிதிக்கூற்றுக்களில் துல்லியமான தகவல்கள் குறிப்பிடப்பட வேண்டும். |

நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் பின்னிணைப்பு (ii) இல் வழங்கப்பட்டுள்ள அறவிடுதல் மற்றும் பதிவளிப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

## 3.4 பொருளாதமற்ற பரிமாற்றங்கள்

மின்கலங்களினை மீள்நிரப்புதல் மற்றும் பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் 2022 மார்ச் 25 இல் ஐ.அ.டொ. 105,717 பெறுமதியில் ஒரு நிறுவனத்திடமிருந்து 17 மின்கல பகுப்பாய்வி (Battery Analyzers) மற்றும் 108 அடாப்டர்கள் (Adapters) என்பவற்றினை கொள்வனவு செய்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிகளின் 4.3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பணவீக்கம் போன்ற காரணிகளினால் எழும் திருத்தப்பட்ட கிரய மதிப்பீடு சம்பந்தப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், இது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. அதன்படி, 2021 நவம்பர் 26 இல் உள்ளபடியாக மொத்தக்கிரயம் ரூபா 24,863,776 தொகையினை அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், அதன்மீது உண்மையான செலவினம் ரூபா 35,609,286 தொகை ஏற்பட்டுள்ளது. | வெளிநாட்டு கம்பனியிடமிருந்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. டொலர் பெறுமதி அதிகரிக்கப்பட்டமையினால் 2022 ஏப்ரல் 18 இல் ரூபா 35,609,286.00 தொகை ஏற்பட்டது. | பெறுகையின் மாற்றங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிகளின் 3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் பின்பற்றப்படும் போது போட்டி விலைமனுக்களினை வழங்கும் முக்கிய விலைமனுதாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் அழைக்கப்பட வேண்டும். கூறப்பட்ட பெறுகையுடன் தொடர்டைய அலகு விலையாக, கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்ட குறித்த நிறுவனத்தின் வலைதளத்தில் ஐ.அ.டொ. 2630 ஆக காட்டப்பட்டுள்ளது. ஆனால், அந்த விலையானது பெறுகையினை ஒப்படைக்கப்படும் நேரத்தில் ஐ.அ.டொ. 5090 என உயர்ந்த | டென்டர் நடைமுறை ஊடாக கடன் அடிப்படையில் உருப்படிகள் கொன்வனவு செய்யப்படும் போது தொழில்நுட்ப விவரக்குறிப்புக்கள் மற்றும் இணையத்தில் காட்டப்பட்டுள்ள தரவு என்பன மாற்றமடையலாம். | சந்தை விலைகளினை பரீட்சிக்காமல் பெறுகை செயன்முறையினை தொடரக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகையாக காணப்பட்டது. அதன்படி, இந்த பெறுகைக்காக போட்டி விலைமனுக்கோரல் செயன்முறை பின்பற்றப்படாமையினால் அரசாங்கத்திற்கு பாதகமான வகையில் ரூபா 14,051,520 தொகை செலவளிக்கப்பட்டுள்ளது. | | |
| (இ) | மின்கல பகுப்பாய்வி (Battery Analyzers) மற்றும் அடாப்டர்கள் (Adapters) தொடர்பாக ஐ.அ.டொ. 105,717 (ரூபா 35,520,912) என்ற அதிக கிரயம் செலவளிக்கப்பட்ட போதிலும், வாக்கி டாக்கி (walkie-talkies) மற்றும் மின்கலங்கள் என்பவற்றுக்குக்காக பயன்படுத்தப்பட்ட அந்த உருப்படிகளின் எண்ணிக்கை முறையே 2594 மற்றும் 3282 ஆக இருந்தது. புதிய மின்கலங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் சராசரி அலகுக் கிரயம் ரூபா 5,000 ஆக குறைவாகவே இருந்தது. கொள்வனவு தேவைப்பாட்டினை முன்னுரிமையளிப்பதற்காக குறைந்த பெறுமதியில் மின்கலத்தினை பகுப்பாய்வு செய்வதற்கு ரூபா 35,520,912 கிரயம் ஏற்படுவது ஒரு பொருளாதாரமற்ற பரிமாற்றமாக இருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்து. | மின்கலத்தினை நீண்டகாலத்திற்கு பாதுகாக்கவும், மற்றும் புதிய மின்கலத்தினை கொள்வனவு செய்வதிலிருந்து தடுப்பதும் இந்தக் கொள்வனவின் நோக்கங்களாக இருந்தன. | செலவினங்கள் பொருளாதாரமற்றதாக இருக்கக் கூடாது. |

## 3.5 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடாமல் 2001 ஆம் ஆண்டிலிருந்து கட்டுநாயக்காவில் உள்ள கதுகுருண்டவில் அதன் செயற்பாடுகளினை மேற்கொண்ட ஆசியன் அவியேஷன் பிறைவேட் லிமிட்டட்டானது 2020 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரையான காலப்பகுதி தொடர்பான ரூபா 420,453 | எழுத்து மூலமான உடன்படிக்கையின்றி முகாமின் வளாகத்தினை கூறப்பட்ட கம்பனி பயன்படுத்துவதாக சட்ட இயக்குனருக்கு அறியக்கிடைத்தவுடன் அவர்களுடைய அகற்றலுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது தொடர்பாக இடம்பெற்ற | சட்டபூர்வமாக நிச்சயிக்கப்பட வேண்டும் என்பதோடு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிலுவைகளை செலுத்தாமல் முகாமை விட்டு வெளியேறியது. அதனால், உடன்படிக்கையின் குறைபாடு காரணமாக நிலுவைத் தொகையினை அறவிட முடியவில்லை. | நீதிமன்ற விசாரணையில் அந்த தொகையிலிருந்து ரூபா 350,000 தொகையினை கழித்துவிட்டு ரூபா 70,453.60 தொகையினை அறவிட தீர்மானித்தது. கம்பனி வேண்டுகின்ற ரூபா 70,453.60 தொகையினை தீர்ப்பனவு செய்யுமாறு கோரிக்கை கடிதமொன்று அனுப்பப்பட்டது. |